**CC.No.228/2020 (JM.No.II, DHARMAPURI)**

**19.01.2026**

**சாட்சிக்கு சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டது. (எதிரிகள் ஆஜர் இல்லை)**

**PW–7 : திரு. பாஸ்கரன் , த/பெ. ராமர்**

**முதல் விசாரணை**

நான் ஆத்துக்கொட்டாயில் குடியிருந்து டிரைவராக வேலை செய்துவருகிறேன். பார்வை மகஜர் மற்றும் கைபற்றுதல் மகஜிரில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையது. கடந்த 7 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் மாலை 04.30 மணிக்கு காவல் துறையினர் சம்பவயிடத்திற்கு வந்து என்னை விசாரித்து அதில் ஒரு கையெழுத்து வாங்கினார்கள். சம்பவயிடத்திலிருந்து கலப்பையுடன் கூடிய டிராக்டர் மற்றும் கல் ஆகியவற்றை என் முன்னிலையில் கைப்பற்றினர். அதில் சாட்சியாக இருந்து இரண்டாவது கையெழுத்திட்டேன். அந்த பார்வை மகஜர் ஏற்கனவே அ.சா.ஆ.2 ஆகவும், கைபற்றுதல் மகஜர் அ.சா.ஆ3 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. இது குறித்து போலிஸார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

நான் 5–ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு எழுத, படிக்க சரியாக தெரியாது, கையெழுத்து போடுவேன். எதிரிகளுக்கும், எங்களுக்கும் நிலம் சம்பந்தமாக பிரச்சினை இருந்து வந்தது என்றால் சரிதான். போலிஸார் விசாரித்த போது எங்களுக்குள் சிவில் வழக்கு நிலுவையில் உள்ளது என்று நான் கூறினேன் என்றால் கூறினேன். போலிஸார் கேட்டு கொண்டதால் கையொப்பம் செய்தேனா என்றால் போலிஸார் சம்பவத்தை பார்த்தீர்களா என்று கேட்டு விசாரித்து கையெழுத்திட சொன்னார்கள், நான் கையெழுத்திட்டேன். அதில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் போலிஸாரிடம் கூறியது போல எதுவும் நடக்கவில்லை என்றாலும், நான் காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்திட்டேன் என்றாலும் சரியல்ல. நான் சொல்வது போல சம்பவம் நடக்கவில்லை என்றால் சரியல்ல.

SUSHMITHA RAJAMANICKAM

Digitally signed by SUSHMITHA RAJAMANICKAM
Date: 2026.01.19 17:26:16 +0530

CC.No.228/2020 (JM.No.II, DHARMAPURI)

19.01.2026

**சாட்சிக்கு சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டது. (எதிரிகள் ஆஜர் இல்லை)**

**PW–8 : திரு. ரவி , த/பெ. வேடன்**

**முதல் விசாரணை**

நான் ஆத்துக்கொட்டாயில் குடியிருந்து மேஸ்திரியாக வேலை செய்துவருகிறேன். எதிரிகள் குமார், ராஜேந்திரன், வேலு ஆகியோர்களின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையது. கடந்த 8 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் மதியம் 01.30 மணிக்கு அவர்கள் செய்த குற்றத்தை என் முன்னிலையில் ஒப்புகொண்டு ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார்கள். அவர்கள் அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எதிரி வேலு வீட்டின் அருகில் இருந்து இரும்பு ராடு ஒன்றும், மரக்கட்டை இரண்டும், மரக்குச்சி ஒன்றும் என் முன்னிலையில் அன்றைய தினமே 03.30 மணிக்கு காவல் துறையினர் கைபற்றுதல் மகஜர் மூலமாக கைப்பற்றினார்கள். எதிரிகள் குமார், ராஜேந்திரன், வேலு ஆகியோர்களின் ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி மட்டும் **அ.சா.ஆ.7, அ.சா.ஆ.8, ஆ.சா.ஆ.9** ஆக குறியீடு செய்யப்படுகிறது. **கைபற்றுதல் மகஜர் ஆ.சா.ஆ.10** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இது குறித்து போலிஸார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

நான் 8–ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் மேஸ்திரி வேலை செய்து வருகிறேன். பிரச்சினைக்கு காரணமான நிலம் எங்களுக்கும் பாத்தியபட்டது என்றால் சரிதான். இந்த நிலம் சம்பந்தமாக எங்களுக்கும், எதிரிகளுக்கும் இடையே தருமபுரி சார்பு நீதிமன்றத்தில் O.S. 201/2018 என்ற வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். வழக்கு சொத்தை நீதிமன்ற ஆணையின் மூலம் அளந்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் நான் பெங்களூரில் இருந்ததால் எனக்கு தெரியாது. நான் பெரும்பாலும் பெங்களூரில் தான் இருப்பேன் என்றால் சரிதான். இந்த பிரச்சினை தெரிந்து தான் நான் பெங்களூரிலிருந்து ஊருக்கு வந்தேன் என்றால் சரிதான். பிரச்சினை நடந்து 2–3 மணி நேரம் கழித்து நான் வந்துவிட்டேன். நான் பெங்களூரில் இருந்து முதலில் தருமபுரி அரசு மருத்துவமனைக்கு சென்றேன். அதன்பிறகு பகல் 12.00 மணிக்கு மேல் இண்டுர் காவல் நிலையத்திற்கு சென்றேன். சம்பவம் காலை 07.00 மணிக்கு நடந்தது. இண்டுர் காவல் நிலைத்திலிருந்து எங்கள் ஊர் 5 கி.மீ தூரம் இருக்கும். காவல் நிலையத்திலிருந்து சம்பவயிடத்திற்கு அன்றைய தினமே பகல் சுமார் 02.00 மணிக்கு சென்றோம். அதன்பிறகு பகல் 03.00 மணிக்கு மேல் காவல் நிலையத்தில் என்னிடம் போலிஸார் கையொப்பம் பெற்றனர். கைபற்றுதல் மகஜரில் நான் படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தேன். இண்டுர் போலிஸார் விசாரணை மேற்கொண்டனர். சம்பவயிடத்தில் என்னிடம் கையொப்பம் பெறவில்லை என்றாலும், காவல் நிலையத்தில் வைத்து தான் கையொப்பம் பெற்றனர் என்றாலும் சரிதான். நான் சம்பவயிடத்திற்கு செல்லவில்லை என்றாலும், போலிஸார் என் முன்னிலையில் எதையும் கைப்பற்றவில்லை என்றாலும் சரியல்ல. எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. வைக்கோல் போரில் போலிஸார் பகல் 02.00 மணியளவில் கைபற்றினர். எங்கள் ஊரில் ஊரை சுற்றி காடு உள்ளதால்

சா.பொ.ஆ.2 ஆன கட்டைகள் எளிதாக கிடைக்க பெறும் என்றால் சரியல்ல. சா.பொ.ஆ.3 ஆன இரும்பு கம்பி ஜன்னல்களுக்கு வைக்கப்படும் கம்பி என்றால் சரிதான். நான் சொல்வது போல பொருட்கள் எதுவும் என் முன்னிலையில் கைப்பற்றபடவில்லை என்றாலும், எதிரிகளுக்கு எதிராக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**நீதிமன்ற கேள்வி 1.** போலிஸார் உங்களை எங்கு அழைத்து சென்று, என்ன செய்தனர் என்றால், ஆத்துக்கொட்டாயில் உள்ள எதிரி வேலுவின் வைக்கோல் போரிலிருந்து இரும்பு ராடு, கட்டை, குச்சி முதலியவற்றை கைபற்றினர். **கேள்வி 2.** கைப்பற்றிய பின் என்ன செய்தார்கள் என்றால் அழைத்து சென்று காவல் நிலையத்தில் கையொப்பம் பெற்றனர்.

SUSHMITHA RAJAMANICKAM

Digitally signed by SUSHMITHA RAJAMANICKAM
Date: 2026.01.19 17:26:52 +0530